திரு. மா. மணிமாறன்; வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள், தனியார் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள், ஹரிஜன நலப் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள் இவர்களுக்கு 'அட்டா'வில் பிடிக்கப்பட்ட பணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்பது தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தால் அந்தப் பணத்தைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்லலாம்.

திரு. எம். ஏ. ஜெயவேலு: அடிக்கடி மாணவர்களிடையே, ஆசிரியர்களிடையே புயல் வீசுகிறது, அதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அத்தகைய நிலை ஏற்படாமல் இருக்க யு. ஜி. ஸி. ஏதாவது நிரந்தரமான முடிவு காண அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசாங்கம் புயலைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Nagappattinam Panchayat Union

* 741 Q—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether there is any representation or proposal to bifurcate the present Nagappattinam Panchayat Union into two Unions viz., Nagappattinam Union and Keezhaiyur Union; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:-

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. ஆறுமுகம்: பொதுவாக தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாயத்து யூனியன்களை, 60 ஊராட்சிமன்றங்களுக்கு மேல் இருக்கக் கூடிய ஒன்றியங்களைப் பிரிக்கும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து; பெரிய ஒன்றியங்களைப் பிரிக்கிற உத்தேசம் இருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ்: புதுக்கோட்டையிலுள்ள திருவலம் யூனியனைப் பிரிக்கப் போவதாகச் சொல்கிறார்கள். அது எப்போது பிரிக்கப்படும்? (விடையில்லை.)